## இளைஞர்களுக்கு பெருமளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கிட முதன்முதலாக டெல்டா மாவட்டங்களான

# தஞ்சை - சேலத்தில் மினி ‘டைடல்’ பூங்காக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, செப். 25 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.9.2024) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், தமிழ்நாட்டிலுள்ள சிறு நகரங்களுக்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினை கொண்டு செல்லும் நோக்கத்துடன் தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், பிள்ளையார்பட்டி கிராமத்தில் 30.50 கோடி ரூபாய் செலவிலும் மற்றும் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஆனைக்கவுண்டன்பட்டி மற்றும் கருப்பூர் கிராமத்தில் 29.50 கோடி ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காக்களை திறந்து வைத்தார்.**

இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக விளங்கி வரும் தமிழ்நாட்டினை, 2030ஆம் ஆண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார இலக்கை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு நிர்ணயித்து, அதற்கான பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டின் இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடும் நோக்கத்துடனும், மாநிலத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காகவும் முதலமைச்சர் அவர்கள் அண்மையில் அமெரிக்க நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு 19 நிறுவனங்களுடன் 7616 கோடி ரூபாய் முதலீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய அதீத வளர்ச்சியை கருத்திற்கொண்டு 2000ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் சென்னை தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது நம் மாநிலம் முழுவதும் தகவல் தொழில்நுட்பத்துறையில் மாபெரும் வளர்ச்சி ஏற்பட வித்திட்டது.

‘பரவலான வளர்ச்சியே பார் போற்றும் வளர்ச்சி, சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி’ என்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது எண்ணத் திற்கேற்ப, தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தும் வகையில், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் மினி டைடல் பூங்காக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதில் விழுப்புரம் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட மினி டைடல் பூங்காவை 17.2.2024 அன்று முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக, தஞ்சாவூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காக்களை நேற்று முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். அதன் விவரங்கள்:



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.9.2024) தலைமைச் செயலகத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில், தமிழ்நாட்டிலுள்ள சிறு நகரங்களுக்கு தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியினை கொண்டு செல்லும் நோக்கத்துடன் தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், பிள்ளையார்பட்டி கிராமத்தில் 30.50 கோடி ரூபாய் செலவிலும் மற்றும் சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஆனைக்கவுண்டன்பட்டி – கருப்பூர் கிராமத்தில் 29.50 கோடி ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காக்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தஞ்சாவூர் மினி டைடல் பூங்கா!**

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், பிள்ளையார்பட்டி கிராமத்தில் 30 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 55,000 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, தஞ்சாவூர் மினி டைடல் பூங்கா கட்டடத்தில் M/s. Hamly Business Solutions India Pvt. Ltd., M/s. Inforios Software Technologies India Pvt. Ltd., ஆகிய நிறுவனங்களுக்கு தள ஒதுக்கீட்டுக்கான ஆணைகளை வழங்கினார். தஞ்சாவூர் மினி டைடல் பூங்கா கட்டடத்தில் 30 சதவிகித தள ஒதுக்கீடு தற்போது வரை வழங்கப்பட்டுள்ளது.

**சேலம் மினி டைடல் பூங்கா**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், ஆனைக்கவுண்டன்பட்டி மற்றும் கருப்பூர் கிராமத்தில் 29 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 55,000 சதுரடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள மினி டைடல் பூங்காவை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்து, சேலம் மினி டைடல் பூங்கா கட்டடத்தில் M/s. Namma Office, M/s. AKS Hitech Smart, M/s. Tamil Zorous Pvt. Ltd., M/s. Telth Healthcare Pvt. Ltd., Solutions, M/s. Access Healthcare ஆகிய நிறுவனங்களுக்கும் தள ஒதுக்கீட்டுக்கான ஆணைகளை வழங்கினார். சேலம் மினி டைடல் பூங்கா கட்டடத்தில் 71 சதவிகித தள ஒதுக்கீடு தற்போது வரை வழங்கப்பட்டுள்ளது.

**தஞ்சாவூர் மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்களில் உள்ள வசதிகள்**

மினி டைடல் பூங்கா கட்டடங்களில் தலா 500 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் குளிர்சாதன வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள், தடையற்ற உயரழுத்த மும்முனை மின் இணைப்பு மற்றும் மின் இயக்கி வசதிகள், மின்தூக்கி வசதிகள், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள்,

தீ பாதுகாப்பு மற்றும் கட்டட மேலாண்மை வசதிகள், மின் விளக்குகளுடன் கூடிய உட்புற சாலை வசதிகள், 24X7 பாதுகாப்பு வசதிகள், உணவகம் மற்றும் உடற்பயிற்சி கூடம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மினி டைடல் பூங்காக்கள் திறக்கப்பட்டதன் மூலமாக தஞ்சாவூர் மற்றும் சேலம் மாவட்டங்களில் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதுடன் அம்மாவட்டங்களின் சமூக பொருளாதார நிலையும் மேம்படும்.

இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை செயலாளர் வி. அருண் ராய், டிட்கோ மற்றும் டைடல் பார்க் மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி மற்றும் அரசு உயர் அலுவலர்களும், காணொலிக் காட்சி வாயிலாக தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், டி.கே.ஜி.நீலமேகம், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. பா. பிரியங்கா, தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.ராமநாதன், கும்பகோணம் மாநகராட்சி மேயர் க.சரவணன், தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் டாக்டர் அஞ்சுகம் பூபதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும், சேலம் மாவட்டத்திலிருந்து சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.ராஜேந்திரன், இரா. அருள். எஸ்.சதாசிவம், சேலம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் இரா. பிருந்தா தேவி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

---

## முத்தமிழ் அறிஞர் கலைஞர் சிலை திறப்பு!

# அமைச்சர் உதயநிதிஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

*மயிலாடுதுறை, செப்.25-*

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நாளை (26ம் தேதி வியாழக்கிழமை) பகல் 1.00 மணிக்கு மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை வடக்கு ஒன்றிய மணல்மேட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கழகத் தலைவராக 50 ஆண்டு காலத்திற்கு மேல் இருந்து சாதனை படைத்த 13 முறை சட்டமன்றத் தேர்தலில் நின்று வென்று, 5 முறை முதல்வராக இருந்து தமிழுக்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் பாதுகாவலராக திகழ்ந்து, தமிழ்நாட்டு மக்கள் முன்னேற்றத்திற்கு எண்ணற்ற



திட்டங்களை கொண்டு வந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் முழு உருவச் சிலையை திறந்து வைக்க உள்ளார்கள்.

இந்த கலைஞர் சிலை திறப்பு விழாவிற்கு கும்பகோணத்தில் இருந்து வருகை தரும் கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட எல்லையான திருவாடு துறையில் மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் பகல் 12.00 மணிக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சி மற்றும் மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் மணல்மேட்டில் நடைபெறும் சிலை திறப்பு விழா ஆகியவற்றில் மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், சட்டமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தனது அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கேட்டுக் கொண்டுள்ளார்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணையின்படி, மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவிப்பின்படி அரியலூர் மாவட்டம், செந்துறை வடக்கு, மற்றும் தெற்கு ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் தேர்வு குறித்த நேர்முக ஆய்வுக் கூட்டங்கள் கழக சட்டத்திட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டத் துணைச் செயலாளர்கள் மு.கணேசன், லதா பாலு, சி.சந்திரசேகரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன் மாவட்ட அணி அமைப்பாளர்கள் என்.ஆர்.ராமதுரை, க.தர்மதுரை, பானுமதி இராஜேந்திரன், மீனா சாமிநாதன், கருப்புசாமி, ஜெயகுமார், ரவிகுமார், அருண்ராஜா, முருகானந்தம் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

---

## தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் –

# இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையப் பணிகள் முன்னேற்றம்!

### பொதுப் பணிகள் – நெடுஞ்சாலைகள் – சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

### அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்பு!

*சென்னை, செப். 25 -*

தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

ஒன்றிய அரசின் தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையப் பணிகள் பல்வேறு நிலையில் உள்ளன. அத்தகைய பணிகளில் உள்ள இடர்பாடுகளைக் களைந்து, பணிகளில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற நோக்கத்துடன், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நேற்று முன்தினம் (23-9-2024) சென்னை, தலைமைச் செயலக பழைய கூட்டரங்கில் (Old Conference Hall) ஆய்வுக் மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர்மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சியர்கள் நேரிடையாகவும், காணொலிக்காட்சி வாயிலாகவும் கலந்து கொண்டு, சாலைப் பணிகளில் நிலஎடுப்பில் ஏற்பட்ட காலதாமதங்களையும் ஆய்வு செய்தார்கள்.

ஆய்வுக் கூட்டத்திற்கு வந்திருந்த அனைத்து அலுவலர்களுக்கும் நன்றியைத் தெரிவித்த துடன், ஒன்றிய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் நிதின் கட்காரி 13.09.2024 அன்று திருச்சியில் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் திட்டப் பணிகளின் ஆய்விற்குப்பின் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது, தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை நிறைவேற்றுவதில், தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்கிறது என்று பெருமையாக கூறிய ஒன்றிய அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து ஆய்வினை தொடர்ந்தார்கள்.

சில திட்டப் பணிகளில் நிலஎடுப்பு, உயர்அழுத்த மின்கோபுரங்களை மாற்றி அமைப்பது மற்றும் வனத்துறையின் அனுமதி பெறுவது போன்ற இடர்ப்பாடுகளினால் பணி முடிப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. இந்த காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

ஒன்றிய அரசின் 5 தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் இன்னும் நிறைவுப் பெறாமல் உள்ளன. இதற்கான காலதாமதத்தைக் கேட்டறிந்த அமைச்சர், ரூ.121 கோடி செலவில், 53 கி.மீ. நீளமுள்ள 3 தேசிய நெடுஞ்சாலைப் பணிகளுக்கும், வெள்ளக்கோயில்சங்ககிரி சாலையில், உறுதிப்படுத்தும் பணி மற்றும் அவிநாசிதிருப்பூர் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணி ஆகியவற்றை ஒப்பந்தப்புள்ளி குழு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையப் பணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொண்ட அமைச்சர் 384 கிலோ மீட்டர் நீளமுடைய 13 பணிகள் நிலஎடுப்பு, கட்டுமானங்கள் அகற்றுதல், ஆக்கிரமிப்புகள் போன்றவற்றால் காலதாமதம் ஆவதைக் கேட்டறிந்து, நிலநிர்வாக ஆணையர் மற்றும் நிலஎடுப்பு அலுவலர்கள் தனிக்கவனம் செலுத்தி, இத்தகைய இடர்ப்பாடுகளைக் களைய வேண்டும் என்று உத்தரவிட்டார்.

31 கி.மீ. நீளமுடைய சாலைப் பணிகள் வனத்துறையின் அனுமதி எதிர்நோக்கி நிலுவையில் உள்ளது. காஞ்சிபுரம் மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர்கள் உடனடியாக நிலம் மதிப்பு நிர்ணயம் செய்து உயர் அழுத்த மின் கோபுரங்களை மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பக்கிங்ஹாம் கால்வாயில் பாலம் கட்டுவதற்கான தடையின்மைச் சான்றிதழ் அளிப்பதில் உள்ள இடர்ப்பாடுகளை களைந்து தடையின்மைச் சான்று பெற்று, 31 கி.மீ. நீளமுடைய சாலைப் பணியை முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

**குறித்த காலக் கெடு!**

திருவள்ளூர் மாவட்டத்தில், தேசிய நெடுஞ்சாலையின் எல்லைக்குள் தற்காலிக கொட்டகைகள், வீடுகள், மற்ற கட்டுமானங்கள் ஆகியவற்றை உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்றும், நிலஎடுப்பு அலுவலர்களை நியமனம் செய்வதில் காலதாமதத்தை தவிர்த்தால்தான், சாலைகளை குறித்த காலக்கெடுவிற்குள் அமைக்க முடியும் என்று தெரிவித்தார்.

சென்னை துறைமுகம் மதுரவாயல் இரண்டு அடுக்கு உயர்மட்ட சாலைப் பணியில், இந்திய இராணுவத்திடம் உள்ள 490 மீட்டர் நிலத்தை பெறுவதில் உள்ள காலதாமதம் தவிர்க்க உரிய நடவடிக்கை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மாமல்லபுரம் முதல் முகையூர் வரை, 31 கி.மீ. நீளமுடைய சாலைப் பணி நீதிமன்ற வழக்குகளின் காரணமாக தாமதமாகிறது. இந்த நீதிமன்ற வழக்குகளை விரைந்து முடித்து சாலைப் பணியை துவக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

மேலும், முகையூர் மரக்காணம் பிரிவு நான்கு வழித்தட சாலைப் பணி, நேரலூர்கொரப் பள்ளி அக்ரஹாரம் பிரிவு நான்கு வழித்தட சாலைப் பணி, தொரப்பள்ளி அக்ரஹாரம் முதல் ஜித்தனஹள்ளி வரை நான்கு வழித்தட சாலைப் பணி, சட்டநாதபுரம் முதல் நாகப்பட்டினம் வரை நான்கு வழித்தட சாலைப்பணி, பாலகொண்டப்பள்ளி தமிழக எல்லை வரை மேற்கில் STRR சாலை அமைக்கும் பணி, கமலாபுரம் முதல் ஒட்டன்சாத்திரம் வரை சாலை அமைக்கும் பணி ஆகிய பணிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்ற காலதாமதம், கையகப்படுத்தப்பட்ட நிலத்தில் மீதமுள்ள நிலத்தினை ஒப்படைக்கும் பணியில் காலதாமதம், நிலம் மற்றும் இதர சொத்துக்களுக்கான இழப்பீடு வழங்குவதில் காலதாமதம் ஆகியவற்றால் சாலை அமைக்கும் பணிகளில் காலதாமதம் ஏற்படுகிறது.

தேசிய நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளர் சம்மந்தப்பட்ட நிலஎடுப்பு அலுவலர்களுடன் தொடர்புக் கொண்டு அவர்களுடைய பணிகளில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**நில எடுப்பிற்கு கூடுதல் இழப்பீடு!**

கேரள மாநிலம், களியக்காவிளை முதல் கன்னியாகுமரி வரை, தமிழ்நாடு எல்லை வரை விடுபட்ட பணிகளை உடனே முடிக்க வேண்டும். நிலஎடுப்பிற்கு கூடுதலாக இழப்பீடு கோரியுள்ளவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும் என்று உத்தரவிட்டார்.

வாடிப்பட்டி முதல் தாமரைப்பட்டி வரை, 30 கி.மீ. சாலைப் பணி, வடுகப்பட்டி முதல் திருமங்கலம் பிரிவு வரை 36 கி.மீ. நீள நான்கு வழித்தட சாலை அமைக்கும் பணி, வடுகப்பட்டி முதல் தெற்கு வேங்கை நல்லூர் பிரிவு வரை 35 கி.மீ. நான்கு வழித்தட சாலை அமைக்கும் பணி ஆகியவற்றில் கையகப்படுத்திய நிலத்தில் மீதமுள்ள நிலத்தினை ஒப்படைக்க காலதாமதம் ஏற்படுவதால் சாலை அமைக்கும் பணி காலதாமதமாகிறது.

தொரப்பள்ளி அக்ரஹாரம் முதல் ஜித்தனஹள்ளி வரை36 கி.மீ. நான்கு வழித்தட சாலை அமைக்கும் பணி வனத்துறையின் தடையின்மைச் சான்று வழங்குவதில் உள்ள இடர்பாடுகள் காரணமாக காலதாமதமாகிறது. இதைப் போலவே பெங்களூர்சென்னை நான்கு வழித்தட சாலை அமைக்கும் பணி சுமார் 81 கி.மீ. நீளத்திற்கு மின்சார வாரிய உயர்மின் அழுத்த கோபுரங்கள் மாற்றியமைப்பதில் உள்ள காலதாமதம் காரணமாக சாலைப் பணி பாதிக்கப்பட்டுள்ளது. இராணிப்பேட்டை மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர்கள் தனிக்கவனம் செலுத்த வேண்டும்.

முகையூர் - மரக்காணம் பிரிவு நான்கு வழித்தட சாலை அமைக்கும் பணி, பக்கிங்ஹாம் கால்வாயின் குறுக்கே பாலம் அமைக்க தடையின்மைச் சான்று பெறுவதில் காலதாமதம் காரணமாக இப்பணி தடைப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் சென்னைதிருப்பதி பிரிவு நான்கு வழித்தட சாலை அமைக்கும் பணி, ஆக்கிரமிப்புகளை அகற்றாததால் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்துவதில் உள்ள பொதுவான சிக்கல்களுக்கு தீர்வுகாரண துறைச் செயலாளர்கள், மாவட்ட ஆட்சியர் மற்றும் நிலஎடுப்பு அலுவலர்கள் இணைந்து செயல்பட வேண்டும் என்று உத்தரவிட்டார்.

**சுற்றுச் சூழல் அனுமதி!**

நிலஎடுப்பு அலுவலகத்தில் காலியாக உள்ள CALA பணியிடங்களை நிரப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கனிம வளங்களை எடுத்து பயன்படுத்த சுற்றுச்சூழல் அனுமதி காலதாமதமின்றி வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை தீர்வு காண சாலையின் முக்கியத்துவம், காலதாமதத்தால் ஏற்படும் நிதியிழப்பு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு குந்தகம் ஏற்படுவதையும் சுட்டிக் காட்டி வழக்குகளை விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஆணையிட்டார்கள்.



தர்மபுரி கிழக்கு மாவட்டம் நல்லம்பள்ளி ஒன்றியம் மாதேமங்கலம் ஊராட்சி வெங்கட்டம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவ – மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகளை முன்னாள் எம்.எல்.ஏ. கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி ஆகியோர் வழங்கினர். உடன்ஒன்றிய கழக செயலாளர் ஏ.எஸ்.சண்முகம், பெற்றோர் – ஆசிரியர் கழகதலைவர். பாளை.அன்பழகன், எஸ்.எம்.சி.தலைவர் இளந்துரை, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கலைச்செல்வன், ராஜகோபால் உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.